**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 1017 of 2017

Depositions of PW -5 witness for ________ { Prosecution / Defence / Court

Name : திரு.குமரேசன்

Father's Name : த/பெ.

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th **day of May** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்பொழுது கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் நான் இவ்வழக்கில் சாட்சியமளிக்கிறேன். கடந்த 13.07.2017 -ம் தேதி கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.காளிமுத்து அவர்கள் நிலைய அலுவலில் இருந்த பொழுது பகல் 12.00 மணிக்கு சிவக்குமார் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி கருமத்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 313/2017 சட்டப்பிரிவுகள் 294(b), 324,506(ii) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கும் ஒரு நகலை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதியம் ஒரு மணி அளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அசோக் மற்றும் பார்த்திபன் ஆகியோர்கள்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.** 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த கல் ஒன்றை கைப்பற்றுதல் மூலமாக கைப்பற்றி உள்ளார்.

சாட்சிகள் சிவக்குமார், பெருமாள், தமிழ்அழகன், மணிகண்டன், தங்கவேல், பார்த்திபன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் எதிரியை கைது செய்து அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். சம்பவத்தில் காயமடைந்த சிவக்குமார் அவர்களுக்கு சிகிச்சை அளித்த ராயல் கேர் மருத்துவமனை மருத்துவர் ஜெயசிங் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று கிடைக்கப்பெற்றுள்ளார். காயச்சான்று **அ.சா.ஆ.** 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை வடிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 **அ.சா.ஆ.** 6 ஆக குறியீடு செயல்படுகிறது. இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்ட பிரிவுகள் 294(b), 324,506(ii) இன் கீழ் கடந்த 09.10.2017 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்க விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் புகார் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆ.சா. ஒன்று கொடுத்த பொய்யான புகாரை பெற்று சரிவரப்புலன் விசாரணை மேற்கொள்ளாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் தவறுதலான குற்றை இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness** **(Sd/-T.Arunkumar)**

**Judicial Magistrate**

**Sulur.**